1995 ஏப்ரல் 10]

288—

விளாத்துறையில் நீரேற்றுப் பாசனத் திட்டம்

20435*—திரு. மா. சுந்தரதாஸ்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் விளாத்துறை நீரேற்றுப் பாசனத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

விளாத்துறை நீரேற்றுப் பாசனத் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

298—

ஓடைக்காட்டுபுதூரில் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்

19984*—திரு. கே. கந்தசாமி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், பச்சைமலை ஓடைக்காட்டுபுதூரில் உள்ள ஆதிதிராவிடர் உறைவிட நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : நிதி வசதி மற்றும் இட வசதிக்கேற்ப வரும் ஆண்டுகளில் சேலம் மாவட்டம் பச்சைமலை ஓடைக்காட்டுப்புதூரிலுள்ள அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்துவது பற்றி பரிசீலிக்கப்படும்.